
# அகண்டாகார அருணாசல அருவி



நல்லைக் குகன் அழகு மதுரம் அருணாசலத்தான்

ஸ்ரீ சிவகுருநாத குருபீட அறக்கட்டளை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆத்மீக அன்பர்களது அந்தரங்கப் பிரார்த்தனை

(1) சித்த சலனஞ், சிதையாத் துயரம் என அறிந்து, ஏகாந்த தரிசனமுற்றுச் சுவானுபூதி உற அருள் புரிவீராக!

(2) ஓயாச் சிந்தை, ஓயாத் துயர்தான் ஒழியத், தன்னந் தனியாய் ஒளிரும், பரஞானந் தானாகி நிலைக்க, அருள் புரிவீராக!

(3) அனைத்தை அறியும், ஆன்மாவை அறிந்து, தாக்கற்ற, துரிய நிலை தானாய் விளங்க, அருள் புரிவீராக!

(4) முன்னிலை சாராது, மூதறிவைத் தான் உணர்ந்து, பின்னம் இலாப் பேரின்பந் தான் விளைய அருள் புரிவீராக!

(5) அகத்தில் புறத்தில், அருள் ஒளியைக் கண்டு, சுக வெளி தானாய், எங்கும் நீக்கமற நிற்க, அருள் புரிவீராக!

(6) தன்னை அறிந்து, தனி வெளியுந் தானாகித், தன் செயல் அற்றுப், போக்கு வரவு அற்ற பூரணம், பொருந்த, அருள் புரிவீராக!

(7) அகண்ட வெளியில், அமைதி அடைந்து, முத்திக்கு, இதுவே மூலம் என அறிந்து, சக மயக்கம் மாற்றுஞ், சுத்த நிர் விகற்ப சுக நிலை பெற்றுய்ய அருள் புரிவீராக!

(8) இமையாத நாட்டத்து இருந்து உணர்வாருக்கு, அமையும், ஆனந்தமாம்!

(9) எங்கும் இருப்பது இறை அருள் பூரணம்
அங்கு தங்கிட ஆனது மங்களம்
பொங்கி விளைந்தது பூரண மங்களம்
எங்கும் தங்குக எய்து மங்களமே!

- ஸ்ரீமத் அருணாசலம் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# அகண்டாகார
# அருணாசல அருவி

## மூன்றாம் பதிப்பு

**நல்லைக் குகன் அழகு மதுரம்**

வெளியீடு:

**ஸ்ரீ சிவகுரு நாத குருபீட**
**அறக் கட்டளை.**

18 - 01 - 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

©டாக்டர் க. கிருஷ்ணானந்தசிவம், 2011
உரிமை பதிவு பெற்றது

தொடர்புக்கு:
**Asian Trading House (Pvt) Ltd.**
48/11 - 1A Suviddha Rama Road
Colombo-06, Sri Lanka
Tel: 0094 11 208 1273/74, Fax: 0094 11 208 1106
E-mail: drksivam@yahoo.co.in

அச்சு:
குமரன் அச்சகம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6
Tel. - 011 2364550, E-mail: kumbhlk@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக தாகமுடையோர்களுக்கான அருவி.

சாதனையாளர்களுக்கு உதவக் கூடியவை.

பாராயணம் ஓர் சாதனை. அருவியில் நீராடல் ஆனந்தம்.

சாதனை செய்வார் பயன் பெறுவார் - அனுபவிப்பார்.

காலம் சிறிது. பேசிப் பலன் இல்லை.

குருவின் ஆசியும் திருவருளும் கிட்டும்.

அருணாசலத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

Phone - 2588253 & 5513805
Email - rkmcey@eureka.lk

21. 8. 2006

# வாழ்த்துச் செய்தி

இறைவனது திருப்புகழைப் பாடி மகிழ்வதற்குப் பாடல்கள் மிக அவசியமாகின்றன. அவற்றை பக்தியுணர்வுடன் பாடும்போது மனது இறைவனுடன் ஒன்றித்து இன்பம் காண்கிறது. இறைவனும் அந்த பக்தியால் ஈர்க்கப் பட்டு நெகிழ்கிறான். இதுதான் பக்தியின் நோக்கமும், பெருமையும்கூட பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், இக் கலியுகத்திலே இறைவனை அடைய தூய பக்தி ஒன்றே போதும் என்கிறார். அந்த பக்தியை வளர்த்துக் கொள்ள நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபட வேண்டும் எனவும் அறிவுறுத்துகிறார். அவரும் சதா பக்திப் பாடல்களைப் பாடி மகிழ்ந்ததாக அவரது வரலாற்றிவிருந்து அறிகிறோம். இந்த பாடல் தொகுப்பு நூல், அருணாசலத்தான் அகத்திலிருந்து எழுந்த பக்திப் பெருக்கின், வெளிப்பாடு ஆகும். எனவே பக்தர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அருணாசலத்தான் அவர்களுக்கு எங்கள் இனிய நல்வாழ்த்துக்கள்!

சுவாமி ஆத்மகனானந்தா


~ சுவாமி ஆத்மகனானந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# சமர்ப்பணம்



ஸ்ரீ சிவகுருநாத குருபீடக தாபகர்
ஸ்ரீ மத் மகாதேவ சுவாமிகளின் மாணக்கரும்
ஆத்மாத்ம அந்தரங்க வழித் தாபகர்
கொழும்பு ஆண்டவர், ஸ்ரீ தாளையன் சுவாமிகளின் சீடரும்
சுத்த அத்வைத, பிரம்ம சொருபருமாகிய

## ஸ்ரீமத் அருணாசல சுவாமிகள்

அழுந்தொறும் அணைக்கும் அன்னை,
அறிவிலாது ஆடி ஓடி
விழுந்தொறும், எடுக்கும் அப்பன்,
விளையாடும் போது, தோழன்,
தொழுந் தொறும், காக்கும் தெய்வம்,
சொந்தமாய், எடுப்போர்க் கெல்லாம்,
குழந்தையாய், இப்படி உலாவும், என்
சற்குருநாதன், வாழி, வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஓம்

## ஸ்ரீ சிவகுருநாத குருபீடாதிபதி

## (1942-1968)

## நித்த முத்த, அகண்டாகார, அத்வைத,

# ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள்



"தாங்காமல், வையகத்தை அழிக்கும் வேந்தர்,
தரணியில் பலருள்ளார், தருக்கி வீழ்வார்,
ஓங்காமல், அஞ்சாமல், இடர் செய்யாமல்,
என்றும் அருள் ஞானியரே, எமக்கு வேந்தர்"

– பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# முன்னுரை

நாற்பது வருடங்களிற்கு முன், பேராதனை பல்கலைக்கழக முருகன் கோவில் கட்டி எழுப்பிய நாள் முதல், எனது நண்பர் அருணாசலத்தானின், தெய்வ நம்பிக்கையைப் பற்றி, நான் நன்கு அறிவேன். அவர் எழுதிய, தெய்வ பக்திப் பாடல்களுக்கு, முன்னுரை எழுத கிடைத்தது, அந்த முருகனின் கட்டளை என்றே நினைக்கிறேன்.

வாழ்க்கைப் பாதையில், எதிர் நோக்கும், சஞ்சலங்கள், துன்ப துயரங்கள், வேதனைகளுக்கு, கடவுளை, துணைக்கு அழைப்பதனைத் தவிர, வேறு வழி அறியாத, இம் மானிடனுக்கு, அருணாசலத்தான், அருளி இருக்கும் இந் நூல், அளப்பரிய கொடையாகவே கருதப்படும். சமுதாய சீர்கேடுகள், எண்ணில் அடங்கா அநீதிச் செயல்கள், ஒழுங்கீனங்கள் என்று, எம்மைச் சுற்றி நிகழும், அத்தனை கேடுகளின் போது, கடவுளே, நீ எங்கே இருக்கிறாய், என்றே மனம், எண்ணித் தவிக்கின்றது. அப்படியான ஒரு கால கட்டத்தில், வாழ்ந்து கொண்டிருக்கும், எமக்கு, இந்நூல், மனதிற்கு சாந்தி அளிப்பதாகவே இருக்கின்றது.

அருணாசலத்தான் அருளியிருக்கும், இந் நூலில் உள்ள பக்திப் பாடல்கள், படிக்கப் படிக்க, இனிமை அளிப்பதாக உள்ளது. தமிழ்க் கடவுள், எம் பெருமான் முருகக் கடவுளை, பலவாறு போற்றிப் பாடி அருளியிருக்கிறார். இது, தெய்வீக அருள். வீரத்தின் விளக்கம் என்ற தலைப்பில், அவர் அருளியிருக்கும் பாடலில், வீரத்தின் விளக்கமே, முருகா, விடுவித்து வாழ்விக்க வருவாய் என்கிறார். அத்துடன்.

எல்லாமும், எல்லோர்க்கும், கொடுப்பது உன் இலக்கணமே இல்லாமை, இயலாமை, கொடுப்பது, ஏன் ஐயா? என்று கேள்வி எழுப்புகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

இனிமையான சிறந்த வரிகள் என்றும் பக்தர் தம் மனதில், நிலைபெறக் கூடியவை. இதே போல், நல்லூர் அப்பனே, தேர் ஏறி வாறான் முருகன், வரவேனும், வரவேனும் நல்லூர்க் கந்தனே, என் தலைவன் முருகன் என்று, நம் அழகுக் கடவுள், குறிஞ்சிக் குமரனை பலவாறு, புகழ்ந்து பாடும் பாடல்கள், வாசிக்க, வாசிக்க, மிகவும் இனிமையை தருகின்றது.

பக்திப் பரவசத்துடன், இறைவனைப் புகழ்ந்து பாடியிருக்கும் அவர், தாம் பிறந்த மண்ணின் பெருமையையும், பாடுகிறார். இதனை, ஓ! என் உயிர் யாழே, அன்றைய யாழ்ப்பாணம், ஆகிய தலைப்பில் இருக்கும் பாடல்களில் காணலாம்.

பக்திப் பரவசமும், தத்துவ ஞானக் கருத்துக்களை கொண்டுள்ள, இவ்வாறான அரிய நூல்களை, இன்றையக் கால கட்டத்தில், காண்பது அரிதாகிறது. பக்திப் பரவசத்திற்கான, இவ்வாறான நூல்களைக் காண முடியாது தவிக்கும், பக்தர்களுக்கு, இந் நூல், இனிய வரமாகும்.

எளிய தமிழில், அழகு தமிழில், பாமரரும், படித்தறிந்து, மகிழக் கூடியவாறு பாடல் வரிகள் உள்ளன. பாடிப் பாடிப் பரவசம் அடையக் கூடிய வகையில், எளிதான வடிவில், அமைக்கப் பட்டுள்ளது, மேலும் ஒரு சிறப்பம்சமாகும்.

அருணாசலத்தான் அருளித் தந்திருக்கும் இந் நூலை அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டும்.

தமிழ் தழைக்க, பக்திப் பெருக, வழி காட்டி இருக்கும் அருணாசலத்தானின் இந்த அரிய நூல், காலத்தால் அழியாத, புகழ் பெறக் கூடியது, என்று கூறின், அது மிகையாகாது.

**11.08.2010** **கலாநிதி, பிரதாப் இராமனுஜம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# நயவுரை

அருணாசலத்தான் பேனாவையெடுத்து கவிதையெழுதினார் என்று யாராவது சொன்னால் அது வெறும் கட்டுக்கதை. அவர் எழுதவில்லை, ஆனால் பாடினார். கருணைக் கடல் பெருகி, காதலினால் உருகி, பக்தி பரவசத்துடன், பண்ணோடு பாடினார். பாடல்களைத் தான் பதிப்பகத்தார் பிரசுரிக்கிறார்கள்.

''கூவின பூங்குயில்! கூவின கோழி'' என்று நான் கண் விழிக்கும் போது, குதூகலமாக விழிப்பதில்லை. இன்றைக்கு எத்தனை கொலையோ? கிளைமோரோ என்று கவலை வந்து கவ்விக் கொள்ளும் சில நாட்களில் ''லங்காபெல்'' காலையிலே கிணுகிணுக்கும் ''யார் பேசுறது? யாது சமாச்சாரம்'' என்று கேட்க முன்னரே, காற்றினிலே வரும் கீதம் போல, கவிதை மழை பொழியும், தொலை பேசியூடாகத்தான் ''கண்மூடி வாய்திறந்தே கேட்டு ரசிப்பேன்.'' அதிகாலை தியானத்தின் போது, அருள் வாக்காக அவருக்கு அளிக்கப் பட்ட சேதியை, பொழுது புலரும் முன்னே பாட்டாக புனைந்து பாடும் பொழுது முதல் முதலாக கேட்டு ரசிப்பவன், நானே தான். இராகம், தாளம், பல்லவியோடு, பண்ணோடு பாடப்பட்ட, பொருள் செறிந்த பக்தி ரசம் மிக்க, இப்பாடல்களை பதிவு செய்யலாமே! பிரசுரிக்கலாமே. அதை இவ் வையகம் முழுக்க பெறும் என்று, நானே, இந்த விண்ணப்பத்தை முன் வைத்தேன். இவர் வாழ்க்கையின் ஆதார சுருதியான (ஜகதா), அம்பிகையின் அநுசரணையுடன், அப்படியே நிறை வேறும், என்று நம்புகிறேன்.

இப் படல்களுக்கு ஆன்மீகமே ஆதாரம். பக்தியே பக்க பலம். இசையே இழையோடும், இரத்த ஓட்டம். இருந்தும் இக்கால கட்டத்தில் அல்லலுறும் எம் மக்களின் அவலம் இக் கவிதைகளில், ஓர் ஆதங்கமாகத் தொனிக்கத்தான் செய்கிறது.

ஆனாலும் ஆற்றாமை, அம்பாள் அனுக்கிரகத்தால் அடிபட்டுப் போய், ஓர் ஆளுமையாக, அதே பாடல்களில் மாறுவதைக் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

கலங்கிய மனங்களை, கையறு நிலையில் இருப்பவர்களை, கரம் கூப்ப வைத்து கைதூக்கி நிறுத்துகிறது. திகைத்த நிலையில் இருப்பவர்களை, தெம்பூட்டி திசை திறக்க வைக்கிறது.

நோயாளியாய் நொந்து, மருத்துவ மனைகளிலும், பிற இடங்களிலும் படுத்திருக்கும் போது, ஆதரவோடு, அன்போடு பாடும் போது, நோய்த் துன்பம் இலகுவாவதும், தீருவதற்கு உந்து கோலாக மருந்தாகிறது, அனுசரணையாகிறது. எல்லோருக்கும் அருளும் பொருளும் ஆரோக்கியமும் நல்க, அருணாசலத்து அருவி மருந்தாகட்டும். விபுவாக வழி சமைக்கட்டும்.

**ஆ. நடராசா - பொறியியலாளர்** **31.07.2006**
**கரவெட்டி, யாழ்ப்பாணம்.**

கடந்த முப்பது ஆண்டுகளாக என் உணர்வோடும், அறிவோடும், செயலோடும், இரண்டற ஒன்றி, நண்பனாய், காவலனாய், வழிகாட்டியாய், குருவாய், வாழ்க்கைக்கு, சுட்டும் இலட்சியமாய், தத்துவ விளக்கமாய், எந்த மாதிரியும் பண்ணுமல், காலத்தை ஊடுருவும் திறம் படைத்து, காலத்தை ஊடுருவி பார்த்து, மாற்றங்களையும், வருவனவையையும் எதிர்வு கூறும் திறம் படைத்து, நல்லதையே சிந்தித்து, செயலாற்றி பலர்க்கும் உபகாரியாய் அறிவால் நாட்டிற்கு வளம் (மகாவலி, இரணைமடு, வழுக்கை ஆறு மற்றும்) பல இயற்றி, அன்பால், என்பும் ஈந்து, நெக்குருக வைத்த வள்ளல், தாசன், சால்பு, உரைக்க, என்னால் ஒண்ணுமோ. **நாடராசா எனும் பெயர் கொண்டு** தரணியில் வாழ்ந்த ஜீவப்பிரமம். அகண்டத்தில் கலந்த திறம் பாடி போற்றுகின்றேன்.

அன்புடன்

*01. 07. 2010* *~ சிவம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# அருணாச்சல அருவியின் கிளைகள்

01. விநாயகர் துதி
02. விஸ்வநாதம்
03. சிவ சிவ சிவோகம்
04. மா மருந்தே
05. தாளை ஐயனே
06. வாலறிவுடை மகான்களுக்கு வணக்கம்
07. ஏகம் நான்
08. பூரணன் நீ
09. ஏகமே பிரம்மமே
10. ஆழ மூழ்கு மனமே ஆழ மூழ்கு
11. உள்வாங்கு மனமே
12. ஜீவ பிரம்ம ஐக்கிய சொரூபம்
13. கற்பகத் தாயே
14. தேவி திரு முகம்
15. வாணி சரஸ்வதி பாரதி
16. புது யுக கதிர்கள் சொரிவாய்
17. பாரதி சரணம்
18. வெங்கட ரமணா, பூரணப் பொருளே
19. சைவன் இந்து - யார்?
20. வைஷ்ணவன் யார்?
21. ஒளியே வழி காட்டுவாய் (Lead Kindly Light)
22. இறைவா எனக்கோர் ஆசை, சித்திக்க வேண்டித் தொழுவேன்
23. ஞான வரம்பே - மகா மௌனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

24. நல்லைக் குகனே, அழகு மதுரம்
25. நல்லூர் அப்பனே
26. தேர் ஏறி வாறான் முருகன்
27. வரவேணும் வரவேணும்
28. வீரத்தின் விளக்கம்
29. மெழுகாய் உருகி
30. உனையல்லால்
31. என் தலைவன் முருகன்
32. கதிர்காமத்தையனே, நின்னைச் சரணடைந்தேன்
33. விளையாட வாரும் முருகரே
34. கதிர்காம தர்பாரில் கண்டேன்
35. தீபங்கள் ஒளிரட்டும்
36. குவலயத்தின் விழியே
37. ஓ என் உயிர் யாழே
38. அன்றைய யாழ்ப்பாணம்
39. தமிழ் தாய் வாழ்த்து - ஒண் தமிழே உனை ....
40. தணியுமா என் தாகம்
41. வாழும் உயிர்
42. வெற்றி வெற்றி
43. வசை வருமோ உன் மேல்
44. தமிழன் - இவன் காமராஜன்
45. சேது வாயில் திறக்குதே
46. ஹரியின் புதல்வர்கள்
47. TRANSFORMATION
48. ARISE - AWAKE & WORK
50. WALK ALONE AND WALKING ALONE
51. வீழ்வென் என்று, நினைத்தாயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# விநாயகர் துதி

தும்பிக்கை நாயகனே, அம்பிகை சுதனே,
நம்பிக்கையே துணை, மங்கள சுமுகனே

- ***தும்பிக்கை***

விக்கின விநாயக, மறை அருளும்
மாதேவன் மைந்தனே, தடைகள் தகர்ப்பாய்

- ***தும்பிக்கை***

அகிலம் தானாய், தானே அகிலமான,
பூரணப் பொருளே - யோக,
ஞான, மூல, பிரம்ம சொரூபனே,
உன்னில், என்னை, ஏற்றே அருள்

- ***தும்பிக்கை***

## குரு வணக்கம்

அழியா அவித்தை, அழிந்து ஒழிய - ஞான
விழியால், எரிக்கும் விமலன் - மொழியதனை
நெஞ்சே, நினைந்து உருக குருபரன்றன்
கஞ்ச மலர்த் தாளே கதி.

**06.06.2006** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# விஸ்வநாதம்

விஸ்வநாதம், விபும், பூரணம் - நமாமி

- ***விஸ்***

பக்த அனுக்கிரக, பரம கிருபா நிதே,
துக்க விநாசக, மங்கள தாரண

- ***விஸ்***

கைலாச நாதம், நீலகண்டம்
கேதார நிவாசம், பசுபதிம்
மீனாக்ஷி பிரியம், சுந்தரேசம்,
உமாபதிம், மகாதேவம் சிவம்

- ***விஸ்***

ஆதி குரும், லோக குரும், தக்ஷிணா மூர்த்திம்,
மாயா நிரோதம், ஞான சாகரம்
மோக்ஷ மூலம், சிஷ்ய அனுகூலம்
முக்தி சாதனம், ஏகம் நித்தியம்

- ***விஸ்***

**உத்தரகாசி**

**14.05.2002** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# சிவ சிவ சிவோகம்

சிவ சிவ, சிவ சிவ, சிவோகம்
சிவ சிவ, சிவ சிவ, சிவோகம்
- **சிவ சிவ**

ஆனந்த தாண்டவ சிவோகம்
அகண்ட அனுபவ சிவோகம்
- **சிவ சிவ**

மனம் அடக்க சிவோகம்
மனம் நசிக்க சிவோகம்
மயல் அறுக்க சிவோகம்
மூல மந்திரம் சிவோகம்
- **சிவ சிவ**

பவம் அறுப்பது சிவோகம்
பாவம் கெடுப்பது சிவோகம்
சித்த சுத்தி அனுபூதி சிவோகம்
சிவானந்தம் ஆவது சிவோகம்
- **சிவ சிவ**

முத்தி தருவது சிவோகம்
மூலமதாவது சிவோகம்
புரை இல்லது சிவோகம்
பூரணமாக்குவது சிவோகம்
- **சிவ சிவ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

மோன மூலம் சிவோகம்
மோன முடிவும் சிவோகம்
கௌரி சங்கர சிவோகம்
ஷிவங்கரி மனோகரம் சிவோகம்
- **சிவ சிவ**

ஜெகதா நாத சிவோகம்
ஜெகம் முழுமையும் சிவோகம்
தேவ தேவ சிவோகம்
பரமகம்சம் சிவோகம்
- **சிவ சிவ**

தேவ தேவ மகா தேவ சிவோகம்
தத்துவமசிப் பொருள் சிவோகம்
பரப் பிரம்மம் சிவோகம்
பரம சித் சொரூபம் சிவோகம்
- **சிவ சிவ**

தினம் தினம் ஓதுக, சிவோகம்
சிவோகம், சிவோகம், சிவோகம்
- **சிவ சிவ**

Leeds - U.K

அருணாசலத்தான்

**25-01-2008**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# மா மருந்தே

மா மருந்தே, அமுத தாரை, சிவமே

- *மா மருந்தே*

குறைவெல்லாம் தீர்க்கும், பிறவிப் பிணி அறுக்கும்,
மாமருந்தே, மழையெனப், பொழிவாய்

- *மா மருந்தே*

காலம் காலமாய், ஜென்ம ஜென்மமாய்,
புன்மை சேர், புரை வினை, மலையெல்லாம்,
கழுவி கழுவி, அருகி அருகி, நிர்மலமாக்கும்,
மருந்தீஸ்வரா, மாமழையெனப், பொழிவாய்

- *மா மருந்தே*

இமைய தாரை, கங்கையென, புரண்டு ஓடும்,
சுமையான, வினை இரண்டும், கரைந்தே ஓடும்,
சித்த சுத்தி கை வந்தே, நிர்மலமாய்க் கூடும்,
முத்த, அகண்ட, பரிபூரண, விபுவே

- *மா மருந்தே*

**07.12.2003** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# தாளை ஐயனே

தரிசனம் தாரும், தாளை ஐயனே
- ***தரிசனம்***

நிதரிசனமான, நிமல மூர்த்தி
பதமலர் சூடினேன், பரம கிருபாநிதி
- ***தரிசனம்***

பிழை பல செய்தேனை, பேரருளால்
கருணையோடு, வாவென அணைத்து
பெரு வெளி தன்னை, நோக்க வைத்த
ஒப்பறு தயாநிதியே, ஏகமே
- ***தரிசனம்***

ஜென்ம் ஜென்மமாய், பிறந்(து) (தி) இறந்(து) உழன்றேன்
இன் வழி அறியாமல், இருளினில் திரிந்தேன்
கருணைக் கடலே, வல் அரசே, தர்பார்தனில்
பெருவெளி காட்டி, அகண்டம் சேரவே
- ***தரிசனம்***

அழியா அவித்தை அழித்து,
ஞான விழியால், கருமக் கழிம்பு எரித்து
பேசாமல் பேசும், வேதம் அருளி,
ஒளி வெள்ளத்தில், என்றும் இருந்திட
- ***தரிசனம்***

**அருணாசலத்தான்** **06-05-2003**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# வாலறிவுடை மகான்கள்

வாலறிவுடை மகான்களுக்கு வணக்கம்
- வாலறிவுடை
மறை அறிவு, அனுபவக் குன்றேறியோர்,
துறை அறிவு, மாண்புடைய
- வாலறிவுடை

கலைகள் பலவகை, படைக்கும் நிலைகள், பலப்பல
தொழில்கள், ஓவியம், காவிய உரு,
வெளிப் படு வகை, தாக்கம் எண்ணில,
ஆடும் சக்தி, ஆனந்த ரூபம், அனந்தம் - எனும்
- வாலறிவுடை

பிரமம் இரு நிலை - தடத்தம், சொரூபமாம்
சொரூப பத்தியே, தடத்த அனுபவ வழியாம்
சித்த சுத்திக்கு, பக்தி செய்வாய் -
தூய, கண்ணீர் பெருக, அழுவாய் - எனும்
- வாலறிவுடை

மனம் அடக்கல், யோகம், என்றார்
மயல் அறுத்தல், ஞானம் என்பார்
மனம் நசித்தால், மாய திரைகள் விலகும்,
மயல் அறுத்தால், ஆத்ம தரிசனம் தானாம் - எனும்
- வாலறிவுடை

**அருணாசலத்தான்** **30.04.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஏகம் நான்

ஸ்ரீ இராமா, கிருஷ்ணா,
ஸ்ரீ இராமகிருஷ்ணா, எனப் பாடு

மறை புகல் அனுபவம், சித்திக்கவே
இராமா, இராமா, கிருஷ்ணா, கிருஷ்ணா,
ஸ்ரீ இராமகிருஷ்ணா, எனப் பாடு

- ஸ்ரீ இராமா

வேண்டலும் நீயே, விடலும் நீயே,
செய்கையும் நீயே, இன்மையும் நீயே,
காரணமும் நீயே, காரணியும் நீயே
முழுமையும், இம்மையும், மறுமையும், நீயே

(அதனால்)
- ஸ்ரீ இராமா

அப்பன் நிராமயன், ஸ்ரீ இராமகிருஷ்ணன்,
தனை நாடி, வரவேண்டி, நாளும்,
வழி பார்த்து, விழி சோரக், காதலால்,
கருணை பொங்கிக், காத்து நிற்க,

- ஸ்ரீ இராமா

நானுமில்லை, நீயுமில்லை, பூரணமே
மும்மல முடிச்சுமில்லை, மயலுமில்லை,
நித்தியம், நிரஞ்சனம், நிர்மலம்,
நிராமயம், நிர்க்குணம், ஏகம், நான்

(அதனால்)
- ஸ்ரீ இராமா

**26.02.2002** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# பூரணன் நீ

எழுவாய், எழுவாய், என் குழந்தாய்,
- *எழுவாய்*

ஞான சூரியன் நீ, உலகின் ஜோதி நீ,
மயல் போக்கி, சோம்பல் நீக்கி,
- *எழுவாய்*

அச்சமில், நிலையம் காட்டி,
ஆறாதார, சக்தியும் கொண்டு,
பாரெல்லாம், காலடியில் தலை சாய,
இராஜ யோக சிம்மமாய், மிளிரவே
- *எழுவாய்*

வீர நரேந்திரன், என்றும் உன்னை,
விரைவுடன் வருகென, கூவி அழைக்க,
திடம் கொண்ட தீரனாய்,
குன்றா நிறைவுடன், சக்திச் சிம்மமாய்
- *எழுவாய்*

அம்மை சாரதை, உளம் அறிவாய்,
இம்மை துயர், இடர் களைவாய்,
மும்மைக்கும், முதல்வன் நீ, மூலவன் நீ,
செம்மை பெறு, சத்தியன் நீ, பூரணன் நீ
- *எழுவாய்*

**24-02-2002** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஏகமே பிரம்மமே

ஏகமே பிரம்மமே நிர்க்குணமே
- ஏகமே

எல்லாமாய் அல்லதுமான ஒன்று,
ஒன்றாகி, ஒன்றாய் உள்ள
- ஏகமே

ஜென்ம வாசனைகள் அழித்து
மனமது நசித்து, விருத்திகளின்றி
தானே தானாம், அத்துவித அனுபவ
ஆனந்த ஆழியில், அமிழ்ந்திடும்
- ஏகமே

கருணா சொரூபமே நிர்மல பூரணமே
நீயே நானாய் - நானே நீயாய்
ஆனந்த சொரூப இலட்சணமாகி,
தூய நிராமய, துரிய நிலையான,
சச்சிதானந்த சிவமெனும்
- ஏகமே

**01.12.2005** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஆழ மூழ்கு மனமே ஆழ மூழ்கு

ஆழ மூழ்கு மனமே ஆழ மூழ்கு
ஆழ மூழ்கு

சொல்லறு நிலையின், சுகம் பெற
ஆனந்த ஆழியின், அனுபவம் சித்திக்க
ஆழ மூழ்கு

எங்கும் பிரமம், எதிலும் பிரமம்
உள்ளதும் பிரமம், இல்லதும் பிரமம்
உண்மையும் பிரமம், பொய்மையும் பிரமம்
இருப்பது ஒன்றே, அதுவும் பிரமம் - அதனால்
ஆழ மூழ்கு

பேதம் அற்றது பிரமம், பேச்சற்றது பிரமம்
போதம் அற்றது பிரமம், புண்ணியமானது பிரமம்
தூயது பிரமம், துளங்குவது பிரமம்
மோனமும் பிரமம், முக்தியும் பிரமம் - அதனால்
ஆழ மூழ்கு

**அருணாசலத்தான்** **02.10.2008**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# உள்வாங்கு மனமே

உள்வாங்கு மனமே, ஆழ உள்வாங்கு
- உள்வாங்கு

எண்ணம், காற்றென, விரியும் மனமே
உண்மை சொருபம் காண வேண்டிடில்
- உள்வாங்கு

விசாரணைக்கு முன் உண்மையாகவும்
விசாரணைக்கு பின் பொய்யாகவும்
உளது எதுவோ, அதுவே மாயை
மனதின் சொரூபம், மாயை, அதனால்
- உள்வாங்கு

ஆசை அற்று, அசுத்த வாதனைகள் ஓய,
பலன் அற்று, சுத்த கருமம் செய்து
அழுக்கது கழுவியே, சிறுக சிறுக
நிர்மலமாய், ஞான பூமியில், ஏறவே
- உள்வாங்கு

அவித்தை, ஆசை, துன்பக் கர்மம்,
தடை செய், முடிச்சுகள் மாய
துர்ச் சங்கம் ஓய, சங்கல்ப நாச,
ஆத்ம தரிசன, உபாயம் கொண்டு
- உள்வாங்கு

மனம் அற்ற, பரிசுத்த, வெளியில்
அத்வைத பூரண நிலையின்,
ஆனந்த ஆழியின், அனுபவம் ஆகி
சுத்த ஒளிர், பிரம்மாகித், திளைத்திட
- உள்வாங்கு

**அருணாசலத்தான்** **02/10/2008.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஜீவ பிரம்ம ஐக்கிய சொரூபம்

குருவின் திருவடி, தடையெல்லாம், தகர்க்கும்
குருவின் திருவடி, அஞ்ஞானம், அகற்றும்
குருவின் திருவடி, எல்லாம் அருளும்,
குருவின் திருவடி, என்றும் துணையே,

பேசுவதல்ல உணர்வு, வாழ்வது தான்
தயையும், கருணையும், வெளியாக்கி
தரணியில் உடல் கொண்டு, சாந்தி தந்த
அகண்டாகார, நித்த, முத்த, திருவடி வாழ்க

தான் அடங்கி, தரணி அடக்கி,
நீயே நான் எனும், அகண்ட நிலையில்,
குருவே எல்லாம், சர்வம் பிரமம் எனும்
பொன்னார் திருவடி, என்றும் வாழ்க

கருவாகி உருவாகி, களப்பில் ஜீவப் பயிர் செய்து
ஜீவ பிரம்ம, ஐக்கிய சொரூபமாய்,
ஜீவானந்த, லட்சண நிலையின் சுட்டாய்
என்றும், எம்முடன் நிலைத்த, திருவடி வாழ்க

**21-02-2006** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# கற்பகத் தாயே

கற்பகத் தாயே, கருணாகரியே
பொற் பதத் தாழ், சரணம், சரணமம்மா

- **கற்பக**

அருள் ஒழுகும், அகண்டம் சேர்க்கும்
நீயே நான் எனும், நயன தீட்சை, சொரியும்

- **கற்பக**

அஞ்சாதே, எனும், அபய கரமும்,
துஞ்சாதே, எனும், பாதச் சிலம்பும்,
கெஞ்சாதே, எனும், திண் தோளும்,
விஞ்சாதே எனும், சாந்த மனமும், நல்கும்

- **கற்பக**

கலை நிறை நாவும் கறையறு வாழ்வும்,
குறைவில் கொடையும் நிறை நிலை மனமும்,
மறை புகல், தூய அருட் சிந்தையும்,
வல், சிறையறு, அகண்ட, ஒளி வெளி தரு

- **கற்பக**

கழல் தனைக் கருதிக், கண்ணீர் சொரிந்து,
கர்ம யோகத் தீயில், சித்தம் நீறாக்கி,
அதுவுமற்று, இதுவுமற்று, சுட்டாமல் சுட்டி,
அத்துவித, சுபாவம் தரும்

- **கற்பக**

**அருணாசலத்தான்** **29-01-2003**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# தேவி திரு முகம்

தேவி, நீ! திகட்டாத தேன்,
உன் பங்கன், வைத்தியன், நாதன்
முன் பிறந்தான், விக்கினங்கள், தகர்ப்பன்
பின் வந்தான், ஊர் சுற்றி, மயிலன்

- **தேவி**

குடும்பமோ கூட்டு
கூட்டில் தேன், பாகு, முக்கனி
ஏட்டில் எட்டாது உன் இலக்கணம்
எழுதும் ஆசையால் திருமுகம்

- **தேவி**

மயிலன் படைத்தான், படையல்க் கூட்டை
கூட்டு, கொண்டோர் - அமரர்
உம்பரும், இம்பரும், அவர்க்கு இணையாமோ
மாந்தும் மனிதர், காண்பார் - அவனை

- **தேவி**

**அருணாசலத்தான்** **26.05.1998**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# வாணி சரஸ்வதி பாரதி

வாணி, பாரதி, சரஸ்வதி,
- வாணி

நால் நிலை, வாக்கின் நாயகி,
சப்த மண்டல, ஆதார, சுருதி
- வாணி

வெள்ளைத் துகில், சொர்ண அலங்காரம்,
ஞானக் காதல், காந்த வதனம்,
காண்போர், உருகி அமிழும்
அமிர்த கலைப், பிரவாகம்
- வாணி

பூர்ண சந்திர, ஒளி வெள்ளம்,
நாதக் கலை பொழியும், சொரூபம்,
வாசி யோக, சுத்தமன, நர்த்தகி,
ஞானபீட, பிரியா சரஸ்வதி,
- வாணி

அள்ளி அள்ளிக் கொடுப்பார்,
கொட்டிக் கொட்டி விதைப்பார்,
எல்லா நிலை, ஆக்கத் திறலோர்,
எண்ணமெல்லாம், பொங்கும் பாரதி,
- வாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

உன்னைத் தொழுவேன், அழுவேன்,
அரற்றுவேன், உருகுவேன்,
ஏங்குவேன், மறவேன்,
பிரியேன், நினையே - மதுர

- வாணி

கையறு கவலை, போக்கிடுவாய்
இருள், மன வறுமை, அகற்றிடுவாய்
துன்பக் கடல், துகட்டிடுவாய்,
சலனமிலா, மன திடம், நல்கிடுவாய்

- வாணி

என்னை, உன்னில் இழப்பேன்,
நீயே, தானாய், நானாவாவேன்,
விவேக படுக்கை, அறிவின் நிலையே,
பிரம்ம ஞான, அத்து விதப் பொருளே.

- வாணி

**27-08-2008.** **அருணாச்சலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# புது யுக கதிர்கள் சொரிவாய்

முழுமை வளர்ச்சியின், மூல நாயகி
புதுயுக கதிர்கள், சொரிவாய்
- முழுமை

தடைகள் தகர்த்து, களிப்பும், திருவும் பெற,
குஞ்சரக் குருமணியே, உன் பாதம், தொழுவேன்
- முழுமை

பஞ்சமும் நோயும், அறியாமை விலங்கும்,
நெஞ்சக வறுமையும், கையறு கவலையுடன்,
பள்ளத்தில் பரிதவிக்கும், தாழ்வுற்ற மக்கள்,
பல்கலையும், பதவியும், உள்ளத் உயர்வும்
செல்வாக்கும், சொல்வாக்குடன், ஏற்றம் காண
- முழுமை

**அருணாச்சலத்தான்** 01.07.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# பாரதி சரணம்

1. ஆக்கல், அறிவோர், கற்பனை வேண்டுவோர்,
பாடுவார், பாரதி, சரணம், போற்றி.

2. புதிய, பாதைப், புதுமை, மண்ணில் விண்
சமைப்போர், ஆதார ஊற்று, சரஸ்வதி கருணை.

3. சர்வம், சக்தி வலயம், தொடர் இணையம்,
கொள்வதும் கொடுப்பதும், தனித் தனி தகைமை.

4. வாலறிவும், அயரா உழைப்பும், சாதனையின்
செயலுருவும், சக்தி அனுகூலத்தால், விளையும்.

5. எண்ண உரு, ஆக்க மையத் தூண்டல்
சக்தி வெளிப்படு வழிவகை.

6. வாதனை அடக்க, வேதனை போக்க,
வாணி வாலாயம், நாளும் வேண்டும், மருந்து

**அருணாச்சலத்தான்** **01.07.2006**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# வெங்கட ரமணா, பூரணப் பொருளே

பண்டரி நாதா, புண்டரி கேசா
வெங்கட ரமணா, பூரணப் பொருளே
- பண்டரி

கோபியரோடு ஆடியே, மாடுகள் மேய்க்கும்
அலகில் விளையாட்டின் நாயக, - திருமாலே
- பண்டரி

அண்ட சராசரம் அகிலமும், அணுவும்
பிண்டமும், பிரபஞ்சமும், நீயான
பரப்பிரம சொரூபனே, விபுவே,
பேசுவனோ, உன் புகழ், குறை மதி கொண்டே
- பண்டரி

நாமறியோம், முன்னமே முடிந்தது, யாரறிவார்,
பொல்லாப் பொன்றும் இல்லை, சும்மாவிரு
விடுதலையாகி உலகில் விளையாடு எனும்
ஞானியரும் அறிவரோ, உன் லீலா வினோதம்
- பண்டரி

நீயே நானாம், தத்துவமசி
அயம் ஆத்ம பிரம, அனுபூதி
பிரக்ஞானம் பிரம்மம், சொல்லறு நிலை
அகம் பிரம்மாஸ்மி - ஆத்ம பிரம்ம சொரூபனே
- பண்டரி

**அருணாசலத்தான்** **24.08.2006**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# சைவன் இந்து யார் ?

சைவன், இந்து யாரெனக் கேளீர்
- சைவன்

சிவன், விஷ்ணு, அம்பிகை, பிரம்மம்
சம்பந்தம் உடையவனே, சைவன்
- சைவன்

தள்ள வேண்டிவை, என்றும் தள்ளிடுவான்
(கோபம், காமம், களவு, கொலை, மோகம், லோபம், கபடம்)
கொள்ள வேண்டியவை, நாளும் கொண்டிடுவான்
(தயை, கருணை, அன்பு, கொடை, ஒப்புரவு, சாண்றான்மை)
சித்த சுத்தி கை வரவே, சாதனை செய்திடுவான்
தொண்டன், அடியன், எனவே உலவிடுவான்
- சைவன்

நாளும் பொழுதும், அவன் நாமம் பாடிடுவான்
சிவனெனவே, எக் கணமும் வாழ்ந்திடுவான்
தடத்தம், சொரூபம் அறிந்திடுவான்
தண் அருள் கொண்டு, இலங்கிடுவான்
- சைவன்

கருமக் கழிம்பு எரித்து, சித்தம் சுத்தமாகிட
வேதமும் சாஸ்திரங்களும், ஓதாமல் வெளியாகும்
ஐயனும் ஆன்மாவும் ஒன்றாகிட, அலை எழும்பும்
அகிலம் முழுமையும், பரவியே தானாகும்
- சைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

விவேக வைராக்கியம், சத்தியம், சாந்தம், பூண்டு
பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வர, சொரூபமாகி
அட்டமா சித்தியும், அகிலமும், ஒன்றாகிட
நாம ரூப கட்டறுத்து, அகண்டமாகிடுவான்

\- சைவன்

தானேயாகி, தண் அருளுமாகி, தாயாகி
சொல்லும் செயலும் அற்று, அத்துவித
சிவமாகி, சிவவோகமாகி தைல தாரை என
பிரம, சிவமே, சிவோகம், சிவோகம்

\- சைவன்

**அருணாசலத்தான்** **11.03.2008**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# வைஷ்ணவன் யார்?

சொல்லுவோம் வைஷ்ணவன், யாரெனக் கேளீர்,
சேர்ந்தவர் பீடையை, அறிவானே,
- சொல்லுவோம்

எல்லோர்க்கும் துக்கத்தை, எரிப்பவனாயினும்
எள்ளளவும் கர்வம், அடையானே
- சொல்லுவோம்

மன்னுயிர், மக்களை, வந்தித்து, நிற்பான்
மாசுறு நிந்தனை, மொழியானே
சொல், மனம், உடல் அதில், சுத்தமதானவன்
சோதியுற்றால், பெற்ற தாய்மாரே
- சொல்லுவோம்

பாவம், பேராசையற்று, பார்வை, சமத்துவம் உற்று
பரஸ்திரியை, தாயெனப் பணிவானே
நாவினால், பொய் மொழி, நவிலவும் மாட்டான்
நாளும், பிறர் செல்வம், தீண்டானே
- சொல்லுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

மாயையும், மோகமும், மாயும், அவன் பால்
மனதில், வைராக்கியம் உறுவானே
ஓயாமல், ராமனை, உள்ளம் நினைந்திட,
உண்டு, புண்ணியம், நல் உடலதிலே,
- சொல்லுவோம்

காமமும், லோபமும், கபடமும், கோபமும்
கனவிலும், இல்லாத கனவானே.
பாமரர் பார்த்திட, பற் பல, தலை முறை,
பாவனம் (விமோசனம்) அடைந்திட, செய்வானே
- சொல்லுவோம்

**சங்கு - சுப்பிரமணியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஒளியே வழி காட்டுவாய்
## (Lead Kindly Light)

சோதித் தாயே, ஞான ஒளியே, வழி காட்டுவாய்
- சோதிப்

அந்தகார இருள் சூழ், மாயா உலகில்
தட்டுத் தடுமாறி, உழலும் பேதை எனக்கு
- சோதிப்

தொலைவில் உள்ளேன், வழியும் அறியேன்
ஆவை இருள், போர்வையாய் மூடிடுதுதே
திரை கிழித்து, ஆண்டருள்தல், அரிதோ
தீனபந்து, எனப், புகழ், கருணா கரனே
- சோதிப்.

சோதி என்பார், ஞானம் என்பார், பிரமம் என்பார்,
கருணையும் நீ, காதலும் நீ, ஆனந்த சாகரம் நீ,
உன்னாக, இரண்டற்று, உன் ஆழியில், இற(ழ)ந்திட
முனிவரும், தேவரும், தேடுவது, உனை அன்றோ
- சோதிப்

இறப்பது, மாய காரியம், இந்திரியங்கள்
நிலைப்பது, சுத்த அத்வைத பிரம்மமே
அறியும் அறிவு அருளி, சுத்த, அறிவாகி
அகண்டமாகி, பிரம்ம நிலையில், திளைத்திட
- சோதிப்

**அருணாசலத்தான்** **21.10.2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# இறைவா எனக்கோர் ஆசை சித்திக்க வேண்டித் தொழுவேன்

**எங்கு** - எனது மனம், தூய்மையாக, தளைகள் இன்றி, இயங்குமோ
அங்கு செல்ல, அருள்வாய்.

**எங்கு** - எவ் வித அச்சமுமின்றி, சிந்தனை ஊறுமோ,
அங்கு செல்ல, அருள்வாய்.

**எங்கு** - உண்மையும், நேர்மையும், மேலோங்கி உள்ளதோ,
அங்கு, உலவிட அருள்வாய்

**எங்கு** - சிந்தையும், செயலும், தடையற்று, எப்போதும், பரந்து விரியுமோ,
அங்கு, அழைத்துச் செல்வாய்.

**எங்கு** - செயல்கள், சான்றாண்மையில், தளம் கொள்ளுமோ,
அங்கு, நிலைக்க அருள்வாய்.

**எங்கு** - நீ, நான், அவள், அது என்ற, குறுவட்ட, பேதமில்லையோ,
அங்கு, இருக்க அருள்வாய்.

**எங்கு** - சோதனையும், வேதனையும், எதிர்வரும் போது, நிலை குலையாது,
திடமுடன் நிலைக்க, அருள் புரிவாய்.

**எங்கு** - தர்க்க அறிவியல், கோலோச்சுமோ
அங்கு, எனது சிந்தனை, விரிய, அருள் புரிவாய்.

**எங்கு** - சுயநலமும், சுய பேராசையும், மண்ணுள், ஆழப்
புதைக்கப் படுமோ, அங்கு, வதிய அருள் புரிவாய்.

**எங்கு** - நன்மை, பொதுமை, உழைப்பு, மேலோங்குமோ,
அவ் உலகில், என்னுழைப்பும், சேர, அருள் புரிவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

**எங்கு** - அராஜகமும், சுயநலமும், தாண்டவமாடுமோ,
அங்கு தீரனாய் எதிர் கொள்ள அருள் புரிவாய்.

**எங்கு** - பணம், பொருள், தசைவலி, கும்பல் அரசியல், இல்லையோ
அங்கு, என் சேவை, சென்றடைய, அருள் புரிவாய்.

**எங்கு** - சான்றோர்களும், கற்றோரும், பற்றற்றோரும்,
போற்றப்படுகிறார்களோ, வாழ்கிறார்களோ
அங்கு, இருக்க அருள்வாய்.

**எங்கு** - இவற்றால், கலைமகளும், திருமகளும், களிப்புடன் நடம்
புரிவார்களோ, அங்கு, இருக்க, அருள்வாய்.

**எங்கு** - சிந்தையெல்லாம் ஒடுங்கி, அகண்ட தியானம்
இடையூறின்றி, சித்திக்குமோ, ஓ இறைவா –
அங்கு, அப் பூமியில், என்றும் இருக்க, அருள் புரிவாய்.

**04/01/2005** **- அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## வையம் வணங்கும் நல்லைக் குகனே ' போற்றி

# ஞான வரம்பே – மகா மௌனம்

யாழ் பாடி பெற்ற மாதவப் பேறே - போற்றி
பாழ் வாழ்வை நீறாக்கும் நெற்றிக் கண்ணாய் - போற்றி

வையம் வணங்கும் நல்லைக் குகனே - போற்றி
சைவப் பிளம்பே நையும் அடியர் உணர்வே - போற்றி
குலை நடுங்கக் கூத்தாடுவாள் நிலை ஒடுக்குவாய் - போற்றி
நிலை இல்லாமலே, சுழல்வார், தம்மை, நிலை நிறுத்துவாய்- போற்றி

ஆக்கிய அனைத்தும் அழிப்பாய் - போற்றி
அழித்தவையில் ஆக்கம் செய்வாய் - போற்றி
துன்பம் தந்து கா்மம் கழிப்பாய் - போற்றி
இன்பம் துன்பம் யாவும் கா்மத் துடைப்பே - போற்றி

அசுத்த மாயையை நீறாக்கும் அருட் பரையே - போற்றி
சுத்த மாயை பூட்டி சிவோகம் தந்தாய் - போற்றி
அத்துவிதப் பொருளாம், அபேத வஸ்து - போற்றி
அபேத வஸ்து, அனுபவ நிலை, மௌன வைப்பே - போற்றி

மௌன வைப்பே, குணங்குறி இறந்தாய் - போற்றி
தானே அதுவாம், தத்துவப், பெரிய பொருளே - போற்றி
பெரிய பொருளே, மௌன உணர்வே - போற்றி
மௌன உணர்வு கடந்த, ஞான வரம்பே - போற்றி

ஞான வரம்பே! மௌனம்! மௌனம்! மகா மௌனம்!

**07-06-2000** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# அழகு மதுரம்

முருகா, கந்தா, குகா, சண்முகா

நல்லைக் குகனே அழகு மதுரம்
தில்லை ஆடி சுதனே அழகு மதுரம்

கார் கருணைக் கந்தா சரணம் மதுரம்
தேர் ஏறிடும் ஆறுமுகவா சரணம் மதுரம்

கருணை ஒழுகும் அழகு மதுரம்
கண் மலர் ஒளிர் அழகு மதுரம்
காந்த முக மலர் அழகு மதுரம்
கர மலர் அருளும் அழகு மதுரம்
நல்லைப் பதித் தலைவா அழகு மதுரம் (1)

கேச சுருள் அழகு மதுரம்
நுதல் வடிவு அழகு மதுரம்
நயன வளைவு அழகு மதுரம்
கடைக் கண் பார்வை அழகு மதுரம்
நல்லைக் குமரனே நீ அழகு மதுரம் (2)

கொவ்வைச் செவ்வாய் சிரிப்பழகு மதுரம்
முல்லைப் பல் வரிசை அழகு மதுரம்
செந் நா பிரணவம் அழகு மதுரம்
பவள வாய் அமிர்தம் அழகு மதுரம்
ஞான பண்டித நாயகனே நீ மதுரம் (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிரும் வளை நாசி அழகு மதுரம்
மிளிரும் முக விலாசம் அழகு மதுரம்
நெற்றிச் சுட்டி வைரம் அழகு மதுரம்
குளிர் சந்திர பிரகாச அழகு மதுரம்
உயிர் மூச்சு பிரம்மம் அழகு மதுரம்
முத்துக் குமர ஐயனே முழுமையும் மதுரம் (4)

திண் தோள் உயிர் அழகு - மதுரம்
அகண்டம் நேர் நெஞ்சழகு மதுரம்
வைடூரிய நவரத்தின மாலை அழகு மதுரம்
செவ் வேல் காந்த அலை மதுரம்
குவலயக் குகனே உன் அழகு மதுரம் (5)

உருண்டு திரண்ட வயிறு அழகு அற்புதம்
பட்டு பீதாம்பர அழகு அற்புதம்
பனைத் தொடை தாங்கும் அழகு அற்புதம்
பகை ஒழிக்கும் வலிமை அழகு அற்புதம்
நல்லை அப்பனே முழுமையும் அற்புதம் (6)

திண் தோளும் திருவடியும் அற்புதம்
கண் மலரும் கால் அழகும் அற்புதம்
தண்டையும் சிலம்பும் அழகு மதுரம்
தில்லை ஆடிச் சொந்தமே சிவகுமார அற்புதம்
பிரம்ம பதம் சொரியும் நெஞ்சும் அற்புதம்
விஷ்வ ரூப ஆறுமுகவா நீ அற்புதம் (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

மாலும் திருவும் மயனும் வாணியும், மதுரம்
சங்கரனும் உமையும், அருகிருக்கல், மதுரம்
சாம வேதமும், நாத கானமும், ஓங்கிடல், மதுரம்
சதுர் வேதத் தலைவா, என்றும் நீ மதுரம்
கார்த்திகை ஐயனே உன் தர்பார் மதுரம் (8)

கண்டாரை மயக்கும் கலை அழகு மதுரம்
தேவ தேவ மகாதேவ அழகு மதுரம்
ஆத்ம கண நாத அழகு மதுரம்
ஞான மய ரூப அழகு மதுரம்
ஷிவங்கரி உறை மார்பழகு மதுரம்
அலங்கார பிரிய முருகே மதுரம் (9)

பாத பங்கஜ மலர் அழகு அற்புதம்
அரவிந்த தாள் மலர் அழகு அற்புதம்
நீலோற்பர சரண மலர் அழகு அற்புதம்
கோடி சூரியப் பிரகாச அழகு அற்புதம்
சோதித் தாயே நின் அழகு அற்புதம் (10)

தொம் தொம் தாம் தாம் அற்புதம்
திம் திம் திமி திமி அற்புதம்
தும் தும் டம் டம் அற்புதம்
அண்டம் முழுமையும் ஆடல் அற்புதம்
அசைந்து ஆடிடும் ஆறுமுகவா நீ அற்புதம் (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

மாலும் திருவும் மயனும் வாணியும், மதுரம்
சங்கரனும் உமையும், அருகிருக்கல், மதுரம்
சாம வேதமும், நாத கானமும், ஓங்கிடல், மதுரம்
சதுர் வேதத் தலைவா, என்றும் நீ மதுரம்
கார்த்திகை ஐயனே உன் தர்பார் மதுரம் (8)

கண்டாரை மயக்கும் கலை அழகு மதுரம்
தேவ தேவ மகாதேவ அழகு மதுரம்
ஆத்ம கண நாத அழகு மதுரம்
ஞான மய ரூப அழகு மதுரம்
ஷிவங்கரி உறை மார்பழகு மதுரம்
அலங்கார பிரிய முருகே மதுரம் (9)

பாத பங்கஜ மலர் அழகு அற்புதம்
அரவிந்த தாள் மலர் அழகு அற்புதம்
நீலோற்பர சரண மலர் அழகு அற்புதம்
கோடி சூரியப் பிரகாச அழகு அற்புதம்
சோதித் தாயே நின் அழகு அற்புதம் (10)

தொம் தொம் தாம் தாம் அற்புதம்
திம் திம் திமி திமி அற்புதம்
தும் தும் டம் டம் அற்புதம்
அண்டம் முழுமையும் ஆடல் அற்புதம்
அசைந்து ஆடிடும் ஆறுமுகவா நீ அற்புதம் (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

நினைக் காண்கை, அமிர்தம், அற்புதம்
நின் புகழ் லீலை, அமிர்தம், அற்புதம்
உன் செய்கையும், பலனும், அற்புதம்
ஆதி மூலனே, சொல் அறியேன். அற்புதம்
நல்லைப் பூரண, விபுவே, அற்புதம் (12)

அஞ்சாமை தருதல், அதிசயம், அற்புதம்
அறிவாற்றல் நல்கல், அதிசயம், அற்புதம்
ஆளுமை கொடுத்தல், அதிசயம், அற்புதம்
வற்றாக் கொடை வழங்கல், அற்புதம் (13)

குமார இனிமை, கற்பக கந்தா, இனிமை
வள்ளாள் மதுரம், வள்ளி மாணாளா, அற்புதம்
தேர் ஏறுடும் ஆறுமுகவா, அழகு, அற்புதம்
சொல் கடந்த, மோன, முத்துக்குமரன், அற்புதம்
வல் அரசே, கருணைக் கற்பகமே, அற்புதம் (14)

அழகின் அழகே, முருகே, அற்புதம்
செந்தூர மா மருந்து, சடாட்சரம் (*), அற்புதம்
அந்திம கால, வழித் துணை, அதி அற்புதம்
மருள் நசிக்கும், ஞான வேல், அற்புதம் (15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

ஓம் சரவணபவாய நம:, ஓம் ஸ்கந்தாய நம:,
ஓம் கடம்பாய நம:, ஓம் கார்த்திகேயாய நம:,
ஓம் குமராய நம:, ஓம் குருபராய நம:,
ஓம் சண்முகாய நம:, ஓம் ஆறுமுகாய நம:,
ஓம் ஞானபண்டிதாய நம:, ஓம் சிவகுமராய நம: (16)

கதிர் பரப்பும் வேற் படை அதிசயம்
இருள் அழிக்கும் ஒளிர் வேல் அதிசயம்
காலென பரந்த கலாப வேல் அதிசயம்
கொடும் பகை ஒளிக்கும் கால வேல் அதிசயம்
வேற் பெருமானே உன் லீலை அதிசயம் (17)

நோயுறு காலையில் தாதியாயிடல் அதிசயம்
துயர் உறும் வேளையில் துணையாயிடல் அதிசயம்
அந்திம யாத்திரையில் வழி காட்டல் அதிசயம்
இடையறா என் கேள்வனே உன் கருணை அதிசயம் (18)

அடைக்கலம் என் உடல் பொருள் ஆவி அச்சோ
துடைக்கலாய் எம் துயர் அனைத்தும் அச்சோ
படைக்கலம் கந்தா எனும் மூச்சு அச்சோ
மனம் நசிக்க மறக்கிலேன் நின் திருவடி அச்சோ
மனோகர நல்லைப் பூரணமே அச்சோ (19)

வேத நூற் பொருள் அனுபவம் அற்புதம்
விவேக வைராக்கியம் அருள் அற்புதம்
ஆஜாநுபாவ விஷ்வ ரூபம் அமிர்தம் அற்புதம்
அகண்ட ஒளி வெளி தரு அழகு அற்புதம் (20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

நான் என்பதில்லை, எல்லாம் நீயே
குறை ஒன்றில்லை, நிறைவும் நீயே
அறிவு அறியாமை அற்ற, பூரணம், நீயே
முழுமையும் நீயான, பிரம்மமும், நீயே (21)


அணுவின் அணுவே, அகில சக்தி அதிசயம்
அச்சோ ஜீவப் பிரம்ம ஐக்கியம், அதிசயம்
அச்சோ நீ, நான் அற்ற, கைவல்யம், அதிசயம்
அச்சோ பேச்சற்ற பிரம்மமே அதிசயம்
அச்சோ அகம் பிரம்மாஸ்மி அதிசயம் (22)

சரணம் சரணம் சரணாகதம்
சரணாகதம் சரணாகதம் சரணாகதம் நல்லை அப்பனே (23)

மதுரம் மதுரம் நல்லைப் பதி அழகு மதுரம்
மதுரம் மதுரம் நல்லைப் பதித் தலைவன் மதுரம்
மதுரம் மதுரம் யாழும் வேலும் மதுரம்
மதுரம் மதுரம் மயிலும் சண்முகமும் மதுரம்

மதுரம் மதுரம் நல்லை தர்பார் அழகு மதுரம்
மதுரம் மதுரம் முருகுக் குழந்தை மதுரம்
மதுரம் மதுரம் குருநாத அருள் மதுரம்
மதுரம் மதுரம் திருநெல்வேலி சூழ் நல்லை மதுரம் (24)

புவன சுந்தரா உன் அழகு மங்களம்
மங்களம் மங்களம் உன் அருள் மங்களம்
மங்களம் மங்களம் உன் கிருபை மங்களம்
மங்களம் மங்களம் சரவணபவ நாமம் மங்களம்
மதுரம் கல்யாண கார்த்திகேயா மங்களம்
நமாமி நமாமி பாத பங்கஜம் மங்களம். (25)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

ராஜாதி ராஜ மகா ராஜனுக்கு மங்களம்
சுந்தரக் குருவே தயா நிதியே மங்களம்
அருணாச்சலக் குருபரனே மதுரம் மங்களம்
அண்ட பகிரண்ட ஆதாரமே மங்களம்
விஸ்வக் குரு மணியே சரணம் மங்களம்
என் கண்ணே, மணியே சுப்பிரமணியக் குஞ்சே மங்களம்
நல்லைக் குகனே அழகு மதுரம் மங்களம் (26)

**அருணாச்சலத்தான்** **27/06/2010**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# நல்லூர் அப்பனே

நல்லூர் அப்பனே, வருக, வருகவே
தில்லையாடி சுதனே, வருக, வருகவே
- *நல்லூர்*

வல்வினை தீர், சுந்தரனே, வருக, வருகவே
பல்கலையும், திருவும், தர, வருக, வருகவே
- *நல்லூர்*

கிண்கிணி ஒலிக்க, திமிதிமி என, வருக
தேர் ஏறி, ஆடி ஆடி வருக, வருகவே
அசைந்தாடும் அழகே, அரனே, வருக
அருட்கடலே, சிவகுகனே, வருக, வருகவே
- *நல்லூர்*

மங்கள சரஸ்வதி ஊற்றே, வருக, வருக
குபு குபு என, உருண்டு, புரண்டு, வருகவே
அகண்டானுப மூலமே, சிவமே
ஆனந்த வெள்ளமென, வருக, வருகவே
- *நல்லூர்*

**அருணாசலத்தான்** **16.11.2002.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# தேர் ஏறி வாறான் முருகன்

தேர் ஏறி வாறான், முருகன், நல்லைக் குமரன்
- ***தேர் ஏறி***

பார் எல்லாம், பரவசமாகுதே
கார் எனப் பொழியுதே, கருணை வெள்ளம்
- ***தேர் ஏறி***

குரலும், யாழும், வீணையும், குழையுது
சியாமள மயிலும் திம், திமி என ஆடுது
சிதறிய சித்தம், ஏகமாய்க் குவியுது
சீர் எல்லாம், சிறந்து பொங்கவே
- ***தேர் ஏறி***

நீரும் நிறையுதே, நெல்லும் வளருதே
பஞ்சமும், பசியும், காலாய்ப் பறக்குதே
பாரெல்லாம், பரிவுடன் நோக்குதே
கல்வியும், தொழிலும், குன்றாகவே
- ***தேர் ஏறி***

தேவரும், மனிதரும், தொழ வந்தார்
புத்தரும், சித்தரும் புரையில் முத்தரும்
சாந்தியும், நிஷ்டையும் கூடவே
ஞானத் தேரடியில் சிலையாய் நிற்கவே
- ***தேர் ஏறி***

**02.11.98** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# வரவேணும் வரவேணும்

வரவேணும், வரவேணும், கந்தையா,
நல்லூர்க் கந்தையா

வந்தெமக்கு, அருள் தந்தால்
குறையோ ! உனக்கொரு குறையோ !

யாழ் முகாரி பாடியது, போதும் ஐயா,
பாழாய், துகளாவதை, முடிப்பாய் - முருகையா
சென்னீரும், கண்ணீரும், துடைக்க,
உன், ஒரு கை வேண்டுமையா
- ***வரவேணும்***

அழுவதும், தொழுவதும், நீ அறியாயோ,
நாளும் படும் பாடு உனக்கவமானமிலையோ,
அம்மை மீனாட்சி சுதனே ஷிவங்கரி போற்றும் குகனே
கைவிடல் முறையோ ! கருணையில் குறைவோ!
- ***வரவேணும்***

**18.12.97** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# வீரத்தின் விளக்கம்

வீரத்தின் விளக்கமே, முருகா
விடுவித்து, வாழ்விக்க வருவாய்

- *வீர*

தீன சரண்யா, பூர்ண குகா,
தீரா வசை, உன்மேல் வருவது முறையோ

- *வீர*

எல்லாமும், எல்லார்க்கும், கொடுப்பது
உன் இலக்கணமே
இல்லாமை, இயலாமை, கொடுப்பது ஏனையா
அல்லாதவை அழித்து, வல்லாண்மை கொடுத்து
சொல்லாண்மையால், வெல்லாண்மை கொள்ள
நல்லாண்மை, நல்குவாய், நல்லைக் குருமணியே

- *வீர*

**15.12.97** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# மெழுகாய் உருகி

அணைத்த வேளை, எனை இழந்தேன்
குமரா, நல்லைக் குருபரா,
- ***அணைத்த***

அமுதச் சுனையில், நனைந்து, நைந்து
மெழுகாய், உருகியது, அறியாயோ
- ***அணைத்த***

சொல்லும், பொருளுமற்று, செயலும், உணர்வுமற்று,
கல் மனமும் கரும திறமுமற்று,
கண்டம் விட்டு அகண்டமாகி,
ஆனந்த பரப்பிரம்ம, அனுபவம், மூடவே
- ***அணைத்த***

**09.11.99** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# உனையல்லால்

உனையல்லால், யாரிடம் சொல்வேன்
எனை ஆளும் ஈசனே, நல்லை வாசனே
- ***உனையல்லால்***

துகளாவதும், துன்பத்தில் துடிப்பதும்,
நாளும் நடப்பது, உன் தண்ணளிதானோ
- ***உனையல்லால்***

கண்ணுக் கணிகலம், கண்ணோட்டம் - உன்
கண்மலர் மூடினால், உய்வுமுண்டோ
துன்ப நிலைமாற, கடை விழிப் பார்வை
கால் வினாடி போதுமே
- ***உனையல்லால்***

ஆடலும் பாடலும், இன்பக் கூடலும்
அறிவுத் தேடலும், ஆக்க உழைப்பும்
அமிழ்தம், அள்ளிச் சொரியும் அன்பும்,
இகழ்தல் இல்லாப், பண்பும், வேண்டி
- ***உனையல்லால்***

**18.11.98** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# என் தலைவன் முருகன்

என் தலைவன் முருகன், நல்லைக் குமரன்
- ***என் தலைவன் ....***

சொல்லொணா துன்பம் கண்டேன், அதைத் தாங்கும்,
கல்லொத்த வலுவும் தந்தான்
- ***என் தலைவன் ....***

உருக்கனைய நரம்பும், இரும்பனைய தசையும்,
மாளாத சிந்தையும், மாறாத விழுமியமும்,
தாளாத உழைப்பும், தளராத மனமும்,
நிறைவான தயையும், குறையாத அன்பும், தந்த
- ***என் தலைவன் ....***

அறிவியற் கலைகள் தந்தான்,
புத்தம் புது யுக்திகள் தந்தான்
பல் உலகின், பார்வையும், பரிவும் காட்டி,
நல் அறிவுத் திரட்சியின், அனுபவ முகிழ்ப்பும் கொண்டு
புதுப் பிறவி கண்டேன், புதுயுகம் படைப்பேன்
- ***என் தலைவன் ....***

**11.05.98** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# கதிர்காமத்தையனே

## நின்னைச் சரணடைந்தேன் அகிலலோக நாயக

நின்னைச் சரணடைந்தேன், அகிலலோக நாயகா
***-நின்னை***

வருக, வருக, என அழைத்தால்,
வாராதிருக்க வழக்குண்டோ, வள்ளலே
***-நின்னை***

கடையிலும் கடைய வேடர் குலம் மகிழ்வோனே
கம்பீர வேழம் தாங்கும், முருகோனே
இடர்கள் தீர்க்கும் இன்ப ஊற்றே
அருள் கங்கையெனப் பாயும், கதிர்காமத்தையனே
***-நின்னை***

அரசே, நின் தர்பார் அழகு கண்டேன்
அருள் பொங்கும், மாணிக்க மலை கண்டேன்
ஆணவ இருள் அழிக்கும், வேல் கண்டேன்
என்னை இழந்த, சுகம் கொண்டேன்
***-நின்னை***

அலை அலையென வருவார், கோடி
பொய்யாம் புன்மை தீர்ப்பாய், என்பார், கோடி
ஐயா, அரசே, சிவக்கொழுந்தே என்பார், கோடி
உய்யவே, வழி காட்டென்பார், கோடி
***-நின்னை***

காலமெல்லாம் கருத்திருத்தி, கருத்தழித்து,
புண்ணியா, உன் அருளால், மயல் போக்கி
கண்டம் விட்டு, ஒளி வெள்ளத்திருக்கும்
ஞானியர் சூழ், பூரண குருவே
***-நின்னை***

**30.03.2002** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்



# விளையாட வாரும் முருகரே

விளையாட, வாரும் முருகரே,
இருளோடும், மருளோடும், உலவும், என்னோடு
- விளையாட

வினை ஓடும், கரும துன்பம் ஓடும்
துணையாகி, திடம் தந்து, நிலையாக்கிட
- விளையாட

இருளும் மருளும் ஓட்டியே,
அகண்ட வெளி ஊட்டியே,
இரசவாத சித்து செய்தே,
நிறை மதிப் பொருளாக்கிட.
- விளையாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் கந்தனைப் பாடு மனமே

நல்லைக் கந்தனை பாடு மனமே
நாளும் பொழுதும் அப்பனை பாடு மனமே
- நல்லை

ஆதி அந்தம் அற்ற பூரணன்
அம்மையும் அப்பனும் ஆனவன்
- நல்லை

காலம் கடந்த காலாதீதன்
கனிந்த காதல் நாயகன், அமுதன்
முக்காலமும் சத்தியன், பிரம்மன்
சுந்தரன் என்றும் எனைப் பிரியான்
- நல்லை

தேவ, அசுரர், ஜெகம், அவன் வடிவம்
குால காலன், பைரவன், திரிபுர எரிதாரி
தில்லை ஆடி, ஊர்த்துவ காளியோடு
ஊழிக் கூத்து ஆடிடும், கூத்தன்
- நல்லை

துயர் துடைத்திடும் துணைவன்
மதுர, மதுரா புரி நாயகி, சுதன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசி புராந்தகன் மைந்தன்,
கங்கையென அருள் புரிந்திடுவான்

- நல்லை

ஜென்ம ஜென்ம வாசனைகள் அழித்திடுவான்
மனம் அற்ற நிலையில், அகண்டம் ஆக்கிடுவான்
நாம ரூபக் கட்டுக்குள் அடங்க ஓணான்
தத்துவ வடிவானவன், இமைய லோலன்

- நல்லை

ஆனந்த சாகரன், அன்பே உருவானவன்
பக்தர் கண்ணீர் தடாகப் பிரியன்
உன்னையும், தன்னைப்போல் ஆக்கிடுவான்
கருணா ரூபன், விமலன் விஸ்வேஸ்வரன்

- நல்லை

**அருணாச்சலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# கதிர்காம தர்பாரில் கண்டேன்

வள்ளி நாச்சியாரே, வடிவேலனிடம் சொல்லவேணும்
- ***வள்ளி***

பிள்ளை துயரம் தாளேன் என்று,
கொள்ளை காதல் கணத்தில், கனிவாய்
- ***வள்ளி***

ஆயிரம் கோடி, சூரிய, கதிர் வேலோன்
அண்டம் எல்லாம், நிறை விபுவாவான்
வேழும் தாங்கும், அழகு கம்பீரம்
கதிர்காம தர்பார் தனில், கண்டேன் என்று
- ***வள்ளி***

கனிவாய் குழற, கண்ணீர் கங்கையாக,
உடல் கூச்செறிய, பொறி புலன் சோர,
தளிர்க் கை கூப்ப, தருக் கடங்க
என்னை இழந்தேன், தாழ்தனில் தந்தேன், என்றே
- ***வள்ளி***

**27.07.2001** **அருணாசலத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# தீபங்கள் ஒளிரட்டும்

என் தலைவன், சிவ சுப்பிரமணியன்
உருவாகும் பருவத்தில், விதைத்த விதைகள்
கருவாகி வளர்ந்து, என்னை வாழ வைத்தன
அவை, அவன் அளித்த அருங் கொடை.

பெயர்கள் பல, அழகன், முருகனுக்கு
சிவனின் மைந்தன், சிவ சுப்பிரமணியன்,
உபதேசம் செய்ததால், குருபரன்.
இவன், எத்தனை பேருக்கு குருபரன்.

தீபத்தால் தீபம் ஏற்றுதல், தீட்சை
ஒற்றை தீபத்தால், எத்தனை தீபம், ஏற்றினன்
(யாழ்) தீபங்கள், ஒளிர் விட்டன, அவனால்,
மறுபடியும், அவதாரமாய், ஒளி பாய்ச்சட்டும்

இருள் அகல, துன்பங்கள் தொலைய
புது யுகம் காண, எதிர் யுகம் படைக்க,
கூர்ந்த மதியும், வலிய தோளுடன் என்றும்,
நவ நிர்மாண தீபங்கள், சூரியனாய் ஒளிரட்டும்

வீழ்ந்தது நாம் அல்ல, கால ஓட்டச், சிந்தனைத் தேக்கம்,
மீண்டும் எழுவோம், 21ம் நூற்றாண்டு, சிந்தையுடன்
உலகெல்லாம், அதிசயித்து, போற்ற, எழுவோம்
சிவ குக, குருபரன், துணையுடன், என்றும்,

**அருணாச்சலத்தான்** **16/10/2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# குவலயத்தின் விழியே

குவலயத்தின் விழியே, யாழ்ப்பாணம்
நிலையாய், நெறியாய், வாழும் சத்தியமே

- ***குவலய....***

அழகு ஒழுகும், அமுதம் பெருகும்
தருமம் வளரும், புதுமை பொலியும்

- ***குவலய....***

அவனியின் தலைவன், அகோசர சொரூபன்,
தான் அதுவாம், தத்துவ இலக்கணம்
மூலம் தேடுவார் எல்லாம், ஒடுங்கும்
ஓங்கு கோபுரம் காண், நல்லைப் பதி கொண்ட

- ***குவலய....***

பூரணப் பொருள் கண்ட, முனிவர் வாழ்ந்த, நன் நாடு
காலத்தை வென்ற, கலைகள் கண்ட, திண் நாடு
ஞாலத்தின், அறிவியல் நுட்பம் ஏற்ற, வண் நாடு
சீலம் கொள் கற்றோர், மலிந்த செந் நாடு

- ***குவலய....***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

ஆழியின் தன்மை பார்க்கும், விண்ணின் வியாபகம் நோக்கும்,
மண்ணின் நுட்பம் காணும், மனிதன் படைத்தவை எல்லாம்,
ஆய்வு, அனந்தம் செய்யும், கல்விக் களம் கண்ட,
மகத்தர்கள் படைக்கும், மாண் புலம் சமைக்கும்

- *குவலய....*

**13-05-1999** **அருணாசலத்தான்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஓ! என் உயிர் யாழே

ஓ ........ ஓ ......... ஓ.......
என் உயிர் யாழே,
இதய, கோடி, வணக்கம்

வீரம் காட்டிய நிலமே,
விவேகம், காட்டி எழுவாய்,
***ஓ! என் ........***

வளர்க கலைகள், வளர்க தொழில்கள்,
புதிய நிலைகள், புதிய நெறிகள்,
செம்மைச் சிந்தை, செயலின் வேகம்,
வியன் உலகின், விந்தைப் படைப்பு
***ஓ! என் ........***

புதுயுக மனிதர், புதுயுகம் படைத்திட,
எழுக பொலிவுடன், தவ நிலம் போற்ற,
ஒழிக அல்லல், அழிக வசைகள்,
வாழ்க, வளமே, வையத் துயர்ந்தே
